04.03.2025

OS. No.97/2023

**பி.வா.சா.1 –** திரு.ஜீவானந்து த/பெ. ராஜேந்திரன்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை :–**

என்னிடம் காட்டப்படும் 11.4.2023 தேதியிட்ட வக்காலத்தில் இருப்பது என்னுடைய கையொப்பம் ஆகும். இந்த வழக்கில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சார்பாக வழக்கறிஞர் நியமனம் செய்யப்படவில்லை. திருக்கோயில் சார்பாக நான் தான் வழக்கறிஞர் நியமித்து இருக்கிறேன். நான் தனிப்பட்ட முறையில் வழக்கறிஞரை நியமனம் செய்ய அனுமதி தேவையில்லை. என்னிடம் காட்டப்படும் வக்காலத்தில் ஆறு வழக்கறிஞர்கள் பெயர் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதில் தினேஷ்,தர்மராஜா என்ற ஒரு வழக்கறிஞர் கையொப்பம் செய்து இருக்கிறார். ஆறு வழக்கறிஞர்கள் பெயரில் வக்காலத்து தாக்கல் செய்து விட்டு ஒரு வழக்கறிஞர் தாக்கல் செய்த வக்காலத்து ஏற்று கொள்ளதக்கது இல்லை என்றால் சரியல்ல. வக்காலத்தில் நான் தேதி குறிப்பிடாததால் நிராகரிக்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல. நான் இந்த வக்காலத்தில் கையொப்பம் செய்யும் போது மூன்றாம் வழக்கறிஞர்கள் இருந்தார்களா என்று நினைவில்லை. வக்காலத்தை நான் திருக்கோவில் அலுவலகத்தில் வைத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் 12.8.2024 தேதியிட்ட வக்காலத்தில் இருப்பதும் என்னுடைய கையொப்பம் ஆகும். அந்த வக்காலத்தில் உள்ள கையொப்பத்தையும், நான் திருக்கோவில் அலுவலகத்தில் வைத்து தான் போட்டேன். நான் கையெழுத்து போடும் போது அதன் கிழே வழக்கறிஞர் கையொப்பம் இருந்ததா என்று ஞாபகமில்லை. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைக்கு உரிய வழக்கறிஞர்கள் பட்டியல் ஆணையர் அலுவலகத்தில் உள்ளது. அதன் நகலை தாக்கல் செய்ய எனக்கு ஆட்சேபணை

ஏதும் இல்லையா என்றால், உயர் அதிகாரிகள் அனுமதி பெற்று தாக்கல் செய்ய முடியும். நான் பிரதிவாதி திருக்கோவில் சார்பாக இந்த ஒரு வழக்கிற்கு மட்டும் வழக்கறிஞர் நியமித்து இருக்கிறேன். தனிப்பட்ட முறையில் வழக்கறிஞரை நியமிக்க அதிகாரம் இல்லை என்றும், என் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முடியுமா என்றால் சரியல்ல. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் பிரதிவாதி கோவில் வருவதால் தனிப்பட்ட முறையில் வழக்கறிஞரை நியமிக்க எனக்கு அதிகாரம் கிடையாது என்றும் பேனல் அட்வகேட் மூலமாக மட்டுமே வக்காலத்து தாக்கல் செய்ய முடியும் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரை சத்திய பிரமாண வாக்குமூலம் நிராகரிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.3 சண்முகம் என்ற நபர் ரவீந்திரன் என்ற நபர் மீது தாக்கல் செய்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையின் சான்றிட்ட நகலாகும். அந்த வழக்கில் நான் தரப்பினார் கிடையாது. பி.வா.சா.ஆ.3 தீர்ப்புரை எப்படி தெரிந்து கொண்டேன் என்றால், ரவீந்திரன் என்பவர் எங்கள் திருக்கோவிலின் வாடகைதாரர் ஆவார். அவர் மூலம் தெரிந்து கொண்டேன். அவ்வாறு தெரிந்த தேதி தெரியவில்லை. சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பு அது குறித்து தெரிந்து கொண்டேன். பி.வா.சா.ஆ.3 தீர்ப்புரையை நகல் மனு கொடுத்து வாங்கினேன். அதற்கு திருக்கோவில் வழக்கறிஞர் தான் பெற்று கொடுத்தார். அந்த திருக்கோவில் வழக்கறிஞர் பெயர் திருமதி.முத்து மாலாதேவி ஆகும். அவர் பேனல் வழக்கறிஞராக இருக்கிறார். பி.வா.சா.ஆ.3 தீர்ப்புரையின் சாராம்சம் என்ன என்றால், வாதி அந்த இடத்தில் இருந்து பிரதிவாதியை வெளியேற்ற வேண்டும் என்றும், வாடகை செலுத்த வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார். அந்த வழக்கு அனுமதிக்கப்பட்டதா, என்றால் தள்ளுபடி செய்யப்பட்டது. என்ன காரணத்திற்காக தள்ளுபடி செய்யப்பட்டது என்றால், வழக்கு மூலம் இல்லை

Appeal

என்று தள்ளுபடி செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் தீர்ப்புரையில் எந்த இடத்தில் அவ்வாறு குறிப்பிட்டிருக்கிறது என்று எனக்கு சரிவர தெரியவில்லை. என்னிடம் காட்டப்படுவது அசல் வழக்கு எண்.577/2011–ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை ஆகும். அந்த தீர்ப்பாணையின் நகல் எப்போது கிடைக்கப்பெற்றது என்றால் தேதி சரிவர தெரியவில்லை. அந்த தீர்ப்பாணைக்கு எப்போது நகல் மனு செய்தோம் என்றால், தேதி சரியாக நினைவில்லை. அந்த தீர்ப்பாணையின் எங்கள் பேனல் வழக்கறிஞர் மூலம் பெறப்பட்டது என்பது சரியானதாகும். பி.வா.சா.ஆ.4 தீர்ப்பாணையில் சொத்து விவரமாக சதுரடி குறிப்பிடவில்லை. நான்கு மால் அளவுகள் மட்டும் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் எத்தனை சதுரடிக்காக தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரம் சொல்லப்பட்டிருக்கிறதா, என்றால் நான்கு மால் மட்டும் சொல்லப்பட்டிருக்கிறது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.5 மேல்முறையீட்டுவழக்கு எண்.40/2020–ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையாகும். அது மேல்முறையீட்டாளர் முன்னிலை ஆகாத காரணத்தினால் தவறுகை காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கிறது. பி.வா.சா.ஆ.5 மேல்முறையீட்டு வழக்கு தகுதியின் அடிப்படையில் முடிவாகவில்லை என்றால் என் வழக்கறிஞரிடம் கலந்து ஆலோசித்து தான் சொல்ல முடியும். தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞரிடம் கலந்து ஆலோசித்தேன். பி.வா.சா.ஆ.6 மேல்முறையீட்டு வழக்கு எண்.40/2020 பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் நகல் ஆகும். அதில் மேல்முறையீடு தவறுகை காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கிறது என்பது தொடர்பாக என் வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நான் தீர்ப்புரை தொடர்பாக எந்த வழக்கறிஞரிடம் ஆலோசனை பெற்றேன் என்றால், திரு.தினேஷ் தர்மராஜ் என்பவரிடம் ஆலோசனை பெற்றேன். நான் தற்போது குறுக்கு விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் தொடர்பாக சத்திய பிரமாண வாக்குமூலத்தில்

சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் வழக்கறிஞரிடம் கலந்து ஆலோசித்ததாக குறிப்பிடவில்லை. அந்த மேல்முறையீடு செலவுத் தொகையின்றி தள்ளுபடி செய்ப்பட்டதை தெரிந்து கொண்டேன். மேல்முறையீட்டு தீர்ப்பாணையில் சதுரடி பரப்பளவு குறிப்பிட்டுள்ளதா என்று சரிவர தெரியவில்லை. நான் அவற்றை படித்து பார்த்து தெரிந்து இருந்தால் சதுரடி குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. மேல்முறையீட்டு வழக்கு தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை தொடர்பாக எனக்கு யார் தெரிவித்தார்கள் என்றால் திருக்கோவில் வாடகை தாரார் ரவீந்திரன் தெரிவித்தார். மேல்முறையீட்டு வழக்கு தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை தொடர்பாக இரண்டு மாதத்திற்கு முன்பாக தெரிவித்தார். நான் மூன்றாம் தரப்பினராக இருந்து நகல் மனு தாக்கல் செய்து ஆவணங்கள் பெற்ற விவரம் தொடர்பாக ஆவணம் தாக்கல் செய்ய இயலும்.

(வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.